## இழிவு செய்யும் கயவர்களுக்கு சொல்கிறேன்; தமிழ்நாட்டில்

# கலைஞரின் புகழைக் காக்க கோடிப்பேர் உயிரையும் கொடுப்பார்கள்!

### சென்னையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் – பேராசிரியர் சுப.வீரபாண்டியன் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 17 -

**சென்னையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில், கலைஞர் அவர்களை இழிவு செய்யும் கயவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பேசுகையில், தமிழ் நாட்டில் கலைஞரின் புகழைக் காக்க தங்கள் உயிரையும் கொடுக்க கோடிப்பேர் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.**

சென்னை அன்பகத்தில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தோழர்களே! இது வழக்கமான கூட்டமோ, கருத்தரங்கமோ இல்லை. துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்று நமக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டு, அதை நாமும் நம்பி விலகி விலகிச் சென்ற போது, துஷ்டர்களின் ஏளனமும், ஏகடியமும் எல்லை மீறிப் போய்க்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, பாதகம் செய்பவரைக் கண்டால், பயம் கொள்ளலாகாது பாப்பா, மோதி மிதித்து விடு பாப்பா, அவர் முகத்தில் காரி உமிழ்ந்து விடு பாப்பா என்பதற்கு ஏற்ப, கலைஞரை இழிவு செய்ய முயற்சி செய்யும் கயவர்களின் முகத்தில் உமிழ்ந்து விடக் கூடியிருக்கும் கூட்டம் இது!

தலைவர் கலைஞர் குறித்த சீமானின் இழிவான பேச்சுக்கு அடுத்த வாரம் ஒரு கண்டனக் கூட்டம் நடத்தலாம் என்று நண்பர்கள் சொன்னபோது நான் அதை ஏற்கவில்லை. அப்படிச் செய்தால் இந்த வாரம் நாம் உயிருடன் இல்லை என்றல்லவா ஆகும் என்று சொன்னேன். அதனால்தான் 24 மணி நேரத்தில் எதிர்வினை ஆற்ற வேண்டும் என்ற நோக்கில் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

**இழிவாகப் பேசுவதற்கு இந்த நாடு அனுமதிக்காது!**

சீமான் போன்ற கயவர்களுக்கு சொல்கிறேன். உங்கள் பேச்சைக் கேட்டுக் கைதட்ட 100 பேர் இருக்கலாம். ஆனால் கலைஞரின் புகழைக் காக்க, தங்கள் உயிரையும் கொடுக்கிற கோடிப் பேர் இங்கிருக்கிறார்கள்.

எத்தனை தொகுதிகளில் போட்டியிட்டாலும் ஒரு தொகுதியில் கூட டெபாசிட் வாங்குவதற்கு துப்பில்லாதவர்கள், ஐந்து முறை முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞரைப் பற்றிப் பேசுகிறார்கள். கண்ட கண்ட நாய்களெல்லாம், கலைஞரைப் பற்றித் தரக்குறைவாகப் பேசுவதற்கு இனி இந்த நாடு அனுமதிக்காது.

பேசுவதை எல்லாம் பேசிவிட்டு, இப்போது இரண்டு காரணங்களை அவர்கள் சொல்கிறார்கள்.

ஒன்று, அவர்களுக்குச் சண்டாளன் என்னும் வார்த்தைக்கு என்ன பொருள் என்றும், அது ஒரு சாதியினரை இழிவுபடுத்தும் சொல் என்றும் தெரியாதாம். இரண்டாவது, இது யாரோ எழுதி யாரோ பாடிய பாட்டாம். இவர்களின் சொந்தப் பாட்டு இல்லையாம். அதை எடுத்துப் பாடினோம், அவ்வளவுதான் என்கிறார்கள்.

**சீமானின் மிகப்பெரிய பித்தலாட்டம்!**

அந்தச் சொல்லுக்குப் பொருள் தெரியாது என்பது எவ்வளவு பெரிய பொய்! இதே சீமான் அந்தச் சொல்லைப் பயன்படுத்தியதற்காக வருத்தம் தெரிவித்து எழுதிய கடிதம், தலித் முரசு ஏட்டில் (அக்டோபர் 2006) அப்படியே இருக்கிறது. தான் இயக்கிய "தம்பி" திரைப்படத்தில் அப்படி ஒரு சொல் இடம் பெற்று விட்டதற்காக வருத்தம் தெரிவித்தும், தான் பெரியார், அம்பேத்கர் கொள்கைகளைப் பின்பற்று கிறவன் என்றும் எழுதிக் கொடுத்திருக்கிற சீமான், இன்றைக்கு அந்தச் சொல்லுக்கு என்ன பொருள் என்று எனக்குத் தெரியாது என்று கூறுவது மிகப்பெரிய பித்தலாட்டம்.

அதேபோல யாரோ எழுதிய பாட்டைத் தானே நான் பாடினேன், அது எப்படித் தவறாகும் என்று கேட்பதும் இன்னொரு விதமான ஏமாற்று வேலை! அதை எந்த கழிசடை எழுதி இருந்தாலும், தவறு தவறு தானே! கேடுகெட்ட அந்த வரிகளைத் திருப்பிப் பாடுவது என்பதும் குற்றம்தானே!

இப்படி ஒரு கீழ்த்தரமான செயலைச் செய்துவிட்டு, முடிஞ்சா என் மீது வழக்கு போடு பார்க்கலாம், தைரியம் இருந்தால் வழக்கு போடு என்று வாய்ச்சவடால் பேசுகிறார். நீ என்ன பெரிய வெங்காயமா? இங்கே நான் உனக்கு ஒரு சவால் விடுகிறேன்.

**நினைவு இருக்கிறதா சீமான்?**

விஜயலட்சுமி என்று ஒரு பெண்ணை நினைவு இருக்கிறதா சீமான்? அந்தப் பெண் எத்தனை மோசமாக உன்னைப் பற்றி எத்தனை காணொலிகளை வெளியிட்டு இருக்கிறார்! அதில் இருக்கும் சில சொற்களைச் சொல்லட்டுமா? "ஏய் தொடப்பக்கட்ட, மானங்கெட்டவனே ....." என்றெல்லாம் அந்தப் பெண் சீமானைப் பார்த்துப் பேசி இருக்கிறார். நான் குறைந்தபட்ச நாகரிகமான சொற்களை மட்டும் தான் இங்கே சொல்லி இருக்கிறேன். இவற்றை விடப் பல மோசமான சொற்கள் அந்தக் காணொலியில் இருக்கின்றன. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்தக் காணொலி உலகம் முழுவதும் வலம் வந்து கொண்டிருக்கிறது. இன்று வரையில் பல லட்சம் பேர் அதனைப் பார்த்திருக்கிறார்கள். மிகப்பெரிய தைரியசாலி போலப் பேசுகிற சீமான் ஏன் அந்தப் பெண் மீது இன்று வரையில் ஒரு வழக்கு கூடப் போடவில்லை?

நீ பெரிய தைரியசாலியாக இருக்கிறாய் என்றால், அந்தப் பெண் மீது ஒரு மான நட்ட வழக்கு போட வேண்டியது தானே! மானம் உள்ளவர்கள்தான் அந்த வழக்கைப் போட முடியும் என்பது வேறு செய்தி. போகட்டும், ஒரு குற்றவியல் வழக்காவது போட்டு இருக்க வேண்டாமா? இப்போது சொல்கிறேன் ... தைரியம் இருந்தால், நீ அவ்வளவு பெரிய வீராதி வீரன், சூராதி சூரன் என்றால், அந்தப் பெண் மீது வழக்கு போடு!



**சாக்கடையில் கல் எறிவது போல...**

அவர்கள் தைரியம் பற்றி எனக்குத் தெரியும்! ஆனால் அவர்கள் ஒரு விதமான உளவியல் போரை இங்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி யாராவது பேசினால் அது சாக்கடையில் கல் எறிவது போல என்னும் எண்ணத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். யாரும் சாக்கடையில் கல் எறிய மாட்டார்கள். அந்த அழுக்கும், நாற்றமும் தங்கள் மீதும் ஒட்டிக் கொள்ளும் என்பதால்!

இந்த இடத்தில் ஒரு மேற்கோள் என் நினைவுக்கு வருகிறது. பெர்னாட்ஷா சொன்னார்:

"Never wrestle with a pig. you will be come dirty but the big will love it". ஆம்; பன்றிகளோடு நாம் சண்டையிடக் கூடாதுதான். சில நேரங்களில் வேறு வழி இல்லாமல் போகிறது!

**வசைச்சொற்களை உரமாக்கிக் கொண்டவர்!**

ஒரு முறை தலைவர் கலைஞர் பேசியுள்ள வரிகளை, இன்று காலை தோழர் நெல்லை பாபு எனக்கு அனுப்பியிருந்தார். "பேசிப் பேசியே , ஏசி ஏசியே, என்னை , என் குடும்பத்தை, என் பிள்ளைகளை எவ்வளவோ பேர் இழிவு படுத்துகிறார்கள். ஒரு செடியை நோக்கி வீசப்படுகிற சாணத்தை, மலத்தை அது எப்படி உரமாக்கிக் கொண்டு வளர்கிறதோ, அப்படியே நான் இந்த வசைச் சொற்களை எல்லாம் உரமாக்கி கொண்டு வளர்கிறவன். "

என்னோடு யாராவது தர்க்கம் செய்ய முடியுமா என்பது சீமானின் கேள்வி. நீ என்ன அவ்வளவு பெரிய அறிவுலக மேதையா? தன் படிப்பு என்ன, அறிவு என்ன என்பதைச் சீமானே தன் பேச்சு ஒன்றில் குறிப்பிடுகிறார். "காலையில் கல்லூரி வாசலில், நானும் என் அண்ணன் ரவியும் ஆளுக்கு ரெண்டு மொந்தைகள் கள் குடிச்சிட்டு, கல்லூரியில் வருகைப் பதிவு மட்டும் கொடுத்துவிட்டு, சினிமா தியேட்டரில் சினிமா பாத்துவிட்டு, புரோட்டா சாப்பிட்டுவிட்டு, வீட்டுக்குப் போவோம்" என்கிறார். பாருங்கள் எவ்வளவு பெரிய அறிவுக் கொழுந்து! இந்த படிப்புக்கும், உலக அறிவுக்கும் தர்க்கம் செய்ய வேறு மற்றவர்களைக் கூப்பிடுகிறார். பாவம் இளையான்குடி, ஜாகீர் உசேன் கல்லூரிக்கு இப்படி ஒரு அவமானம் நேர்ந்திருக்கிறது!

இவர் ஒழுங்காகப் படிக்காததற்கு என்ன காரணமாம்? அதற்கும் நம் தலைவர் கலைஞர்தான் காரணமாம்! ஏன் என்றால், காமராஜர் எல்லோரையும் படிக்க வைத்தாராம். கலைஞர் குடிக்க வைத்தாராம்.

கலைஞர் யாரையும் படிக்க வைக்கவில்லையா? அவருடைய காலத்தில் பள்ளிக்கூடங்களை எல்லாம் அவர் மூடிவிட்டாரா? உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், 1952 ஏப்ரலில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக ராஜாஜி பதவியேற்ற போது, 6000 பள்ளிக்கூடங்களை மூடினார். அவற்றைத்தான் 54 ஆம் ஆண்டு காமராஜர் வந்து திறந்தார்!

**சீமான் கூட்டத்திற்கு இது தெரியுமா?**

காமராஜர் ஆட்சி முடிவுற்ற காலத்தில் தமிழ்நாட்டில் இருந்த தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 34712. கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகு அவற்றின் எண்ணிக்கை 35526. ஏறத்தாழ 800 புதிய தொடக்கப் பள்ளிகள், கலைஞர் காலத்தில், பல்வேறு கிராமங்களில் திறக்க ப்பட்டன. அவர் படிக்கத்தான் வைத்தார். நீ படிக்காமல் குடித்துவிட்டு ஊர் சுற்றியதற்கு கலைஞரா காரணம்?

அது மட்டுமின்றி, 666 மேல்நிலைப் பள்ளிகளில், 11, 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, 112.2 கோடி ரூபாய் செலவில், 1999-ஆம் ஆண்டு, கணினிப் பயிற்சி வகுப்புகளைத் தொடங்கியவர் கலைஞர்தான் என்னும் வரலாறு தெரியுமா இந்தச் சீமான் கூட்டத்திற்கு?

அறிவை விடுங்கள், இவர் வீரத்தைப் பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். தான் விடுதலைப் புலிகளின் வளர்ப்பு என்றும், பிரபாகரனின் செல்லப்பிள்ளை என்றும் மேடைகளில் அடிக்கடி சொல்லிக் கொள்கிறார். எப்போது புலிகள் உன்னை வளர்த்தார்கள்? புலிகளின் போராட்டத்திற்கு உன்னுடைய பங்களிப்பு என்ன? போராட்டம் எல்லாம் முடியப் போகிற நேரத்தில் போய்ச் சேர்ந்தவன் நீ! ஆபத்தில்லை என்று தெரிந்த பிறகு. உன்னிடம் கோபத்திற்குப் பஞ்சமில்லை என்பதை நாங்கள் அறிவோம்! இதோ இந்த அரங்கில் இருக்கிற உமாபதி, பெல்ராஜன் போன்றவர்கள் புலிகளுக்காக உழைத்தவர்கள் . நீ புலிகளின் பெயரைச் சொல்லிப் பிழைக்கிறவன்!

**ஆமைக் கதை தொடங்கி எத்தனை கதைகள்!**

எங்கள் எல்லோரோடும் சேர்ந்து வந்து, ஒரு பத்து நிமிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து விட்டு, இந்த சீமான் இவ்வளவு கதை பேசுகிறாரே என்று நடிகர் ராஜ்கிரண் ஒரு ஏட்டில் ஒரு முறை குறிப்பிட்டிருந்தார். ஆம், ஆமைக் கதை தொடங்கி எத்தனை கதைகள்!

ஈழத்திற்கு இவர் போயிருந்த போது, எல்லோருக்கும் இடையில் ஒரு சாப்பாட்டுப் போட்டி நடக்குமாம். அதில் எல்லோரும் தோற்று விடுவார்களாம். இறுதியில் இவரும் அண்ணனும் (பிரபாகரன்) தான் மிஞ்சி இருப்பார்களாம். கடைசியாய் அவர் வென்று விடுவாராம். என்ன கதை இது! ஒரு தேசத்தின் விடுதலைக்காகப் போர் நடத்தி கொண்டிருந்த ஒருவரை, ஏதோ ஒரு ஹோட்டலில் நடத்திக் கொண்டிருந்தவர் மாதிரி காட்டி இழிவு படுத்துகிறார்.

இறுதியாய்ப் புலிகளின் தலைவர் இவரைப் பார்த்து, நீங்கள் நாட்டுக்குத் திரும்பும்போது உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டாராம். இவர் உடனே இங்கே இருக்கிற இந்த சமையல்காரரை அனுப்பி வையுங்கள் என்று சொன்னாராம். பிரபாகரன் சிரித்து விட்டார் என்கிறார். சிரிக்காமல் வேறு என்ன செய்வார்! ஒரு சிறிய ஆயுதத்தைக் கொடுங்கள் அல்லது ஒரு சிறந்த நூலைக் கொடுங்கள் அல்லது இந்த மண்ணின், மக்களின் உணர்வைக் கொடுங்கள் என்று கேட்காமல், சமையல்காரரை என்னுடன் அனுப்பி வையுங்கள் என்று கேட்கும் தமிழ் தேசியப் போராளியைப் பார்த்து பிரபாகரன் சிரிக்காமல் வேறு என்ன செய்வார்!

**நன்றியோடு இருப்பார்கள் என சொல்ல முடியாது!**

இந்த மகா பெரிய அறிவாளிதான், கலைஞர் இந்த நாட்டுக்கு என்ன செய்து விட்டார். அவர் என்ன புனிதரா என்று கேட்கிறார். இன்று காலை நெல்லையிலிருந்து பேராசிரியர் நீலகண்டன் எனக்கு ஒரு காணொலியை அனுப்பினார். அதில் ராஜா சீனிவாசன் என்று ஓர் இளைஞர் ஒரு நிகழ்ச்சியில் பேசுகிறார். அவர் சொல்கிறார் நான் பிராமண வகுப்பைச் சேர்ந்தவன். முதல் தலைமுறையினருக்குப் படிப்பதற்கு அரசு பண உதவி செய்யும் என்ற அறிவிப்பு வந்த போது. நானும் விண்ணப்பிக்க விரும்பினேன். எங்கள் குடும்பத்தில் யாரும் அதை ஏற்க வில்லை. நமக்கு எல்லாம் அவர் கொடுக்க மாட்டார் என்று சொன்னார்கள். ஆனால் இறுதியில், எந்தவிதமான வேறுபாடும் பார்க்காமல், எனக்கும் சேர்த்து பணம் கொடுத்தார்கள். என் படிப்புக்காக கலைஞரின் அரசு கொடுத்த தொகை 80 ஆயிரம். என் உறவினர்களோ, பெற்றோர்களோ கூட அவ்வளவு தொகை கொடுக்கவில்லை. ஆனால் இன்றைக்கும் என் குடும்பத்தில் யாரும் தி.மு.க.வுக்கு வாக்களிக்க மாட்டார்கள். கலைஞர் இறந்தபோது கூட யாரும் கவலையோடு பேசவில்லை, கேலியாகத்தான் பேசினார்கள் என்கிறார்.

இப்படிப்பட்ட நம் சமூகம் பற்றி 'ஆனந்த விகடன்' இதழில் கலைஞர் ஒரு நேர்காணலில் குறிப்பிட்டு இருக்கிறார். நீண்ட அரசியல் அனுபவத்தில் நீங்கள் கற்றுக் கொண்ட பாடம் என்ன என்னும் கேள்விக்கு, நாம் ஆட்சியில் இருக்கும் போது. நம்மால் முடிந்த உதவிகளைச் சமூகத்தில் மக்கள் எல்லோருக்கும் செய்திட வேண்டும். ஆனால் பயன் பெற்ற எல்லோரும் நன்றியோடு இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆனாலும் நாம் நம் பணிகளைத் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்பது தான் நான் கற்றுக் கொண்டிருக்கிற பாடம் என குறிப்பிட்டுள்ளார். அவர் தான் கலைஞர்!

**பொய்யனைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது காலம்!**

தலைவர் கலைஞர் அவர்களோடு ஒரு முறை காரில் பயணம் செய்து கொண்டிருந்த நேரத்தில். "ஐயா, நீங்கள் காமராஜரோடும் ராஜாஜியோடும் அரசியல் நடத்தியவர். இப்போது இந்த அம்மையாரோடு அரசியல் செய்ய நேர்ந்திருக்கிறதே என்று எப்போதாவது வருத்தப்பட்டது உண்டா?" என்று கேட்டேன். ஒரு சிறிய புன்னகையோடு கலைஞர் விடை சொன்னார் அப்பப்ப பார்த்தால், என்னோடு அரசியல் செய்ய நேர்ந்தது பற்றி காமராஜரும் ராஜாஜியும் என்ன நினைத்திருப்பார்கள்? நாம் அப்படிப் பார்க்கக் கூடாது. காலம், யாரை நம் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறதோ அவர்களோடுதான் அரசியல் செய்ய வேண்டும் " என்றார். எனக்கு என்ன கவலை என்றால், எனக்கு எதிராக காலம் இப்படி ஒரு பொய்யனைக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறதே என்பதுதான்!

அதாவது வலையொளியில் மனோஜ் சான்றுகளோடு தன் உரையொன்றில் குறிப்பிட்டார் அவர் வீட்டுக்கு அருகிலேயே ஒரு அரசுப் பள்ளி இருக்கிறது. கொஞ்சம் தள்ளி அரசு உதவி பெறும் பள்ளியும் இருக்கிறது. அங்கெல்லாம் படிக்க வைக்காமல், ஒன்பது கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் இருக்கிற சர்வதேசப் பள்ளியில், தன் குழந்தைகளைப் படிக்க வைத்திருக்கும் இந்த தமிழ் தேசியப் போராளி. நம் பிள்ளைகளைப் பார்த்து ஆடு மாடு மேயுங்கள் என்று அறிவுரை சொல்கிறார்.

**கலைஞரின் நுட்பமான அரசியல்!**

தெரியுமா சீமான் ... இந்தியாவிலேயே கால்நடைகளுக்கான முதல் பல்கலைக்கழகத்தை தமிழ்நாட்டில் தொடங்கியவர் எங்களின் தலைவர் கலைஞர். 1989 ஜூன் மாதம் 21ஆம் தேதி சட்டமன்றத்தில் அந்த அறிவிப்பை வெளியிட்ட முதலமைச்சர் கலைஞர். அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 இல் அதனைத் தொடக்கினார்.

இது மட்டுமா, 1974 ஜனவரி 1ஆம் தேதி. இந்தியாவிலேயே முதல் முறையாக இந்திய ஒன்றிய அரசில் பணியாற்றுகிறவர்களுக்கு இணையான அகவிலைப்படி உயர்வைத் தமிழ்நாட்டு அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அளித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்! அதனால் 11.3 லட்சம் பேர் பயன் பெற்றனர் என்று குறிப்பிட்டு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு பாராட்டியிருக்கிறது.

கன்னியாகுமரியிலே இன்றைக்கு எழுந்து நிற்கும் திருவள்ளுவர் சிலைக்குப் பின்னால் எத்தனை நுட்பமான அரசியல் இருக்கிறது தெரியுமா.... முன்பெல்லாம் கன்னியாகுமரிக்குச் செல்கிறவர்கள் விவேகானந்தர் பாறை பார்க்கப் போகிறோம் என்பார்கள். இப்போது எல்லோரும் பிரதமர் மோடி உட்பட வள்ளுவர் சிலையைப் பார்த்து விட்டுத்தான் திரும்புகின்றனர். சின்ன கோட்டிற்கு அருகில் ஒரு பெரிய கோடு போடும் அரசியல் வித்தகர் எங்கள் தலைவர் கலைஞர்! 2000 ஜனவரி 1 அன்று திறந்து வைக்கப்பட்ட வள்ளுவர் சிலையின் உயரம் 133 அடி, அதன் எடை 7000 டன்! அதற்கான செலவு 9 கோடியே 85 லட்சம் ரூபாய்த் திட்டம் அது!

**தமிழ் மக்களுக்கு செய்திருக்கும் பணிகள்!**

சென்னையிலே இருக்கும் வள்ளுவர் கோட்டம், ஒவ்வொரு செங்கல்லாகப் பார்த்துக் கலைஞர் கட்டியது! 1976 பிப்ரவரி 22 - 23 ஆகிய நாள்களில் திறப்பு விழா என்று முடிவாகிவிட்டது. ஆனால் ஜனவரி 31-ஆம் தேதியே ஆட்சியைக் கலைத்து விட்டார்கள். அதற்குப் பிறகு, ஏற்ற மாதம் ஏதோ ஓர் அரசு அலுவலகம் திறப்பது போல் அந்த விழா நடைபெற்றது. 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் முதலமைச்சரான், கலைஞர் வள்ளுவர் கோட்டத்தைப் பார்வையிட வந்தார். ஒரு தாய் தன் பிள்ளையைப் பார்ப்பது போல, வள்ளுவர் கோட்டத்தைப் பார்க்கிறேன் என்றார் அவர்!

எத்தனை தமிழ் அறிஞர்களின் நூல்களைக் கலைஞர் நாட்டுடைமை ஆக்கினார் என்று எண்ணிப் பாருங்கள்! மறைமலை அடிகளின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்கி, அவர் குடும்பத்தினருக்கு 30 லட்சம் ரூபாயைக் கொடுத்தார். திரு.வி.க. வின் நூல்களை அவர் தான் நாட்டு உடைமை ஆக்கினார். சுயமரியாதை இயக்கத்தில் இருந்த சாமி சிதம்பரனார் நூல்களை மட்டும் இல்லை, சாமிநாத சர்மாவின் நூல்களையும் அவர் எடுத்துக் கொண்டார். கவிஞர் முடியரசன், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையாரின் நூல்களுக்கு மட்டும் இல்லை. காங்கிரஸ் கட்சியில் இருந்த நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை போன்றவர்களின் நூல்களுக்கும் அவர் உரிய மதிப்பு கொடுத்தார். அனைவரின் நூல்களையும் நாட்டுடைமை ஆக்கினார். எத்தனையோ தமிழ் அறிஞர்களுக்குத் தமிழ் நாட்டில் மணிமண்டபம் கட்டினார்.

இப்படித் தமிழுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் கலைஞர் செய்திருக்கும் பணிகள் ஏராளம் ஏராளம்.

**தமிழ்த் தேசியம் என இனி பேசாதீர்!**

சீமானுக்கு ஒரே ஒரு வேண்டுகோள்.... இனிமேல் தமிழ்த் தேசியம் என்ற பேச்சையாவது நிறுத்தி விடுங்கள். தமிழ் தேசியம் பேசுகிறவர்களுக்கும், இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது?

கூட்டாட்சிக்குப் பாடுபடுவோம் என்று தங்கள் அறிக்கையில் அந்தக் கட்சி சொல்கிறது. கூட்டாட்சி (Federalism )என்றால் என்னவென்பதை உள்வாங்கிக் கொண்டு தான் பேசுகிறார்களா என்று தெரியவில்லை. தனித்தனியாக இருக்கும் அரசுகள் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு, பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய இணைப்பைக் கூட்டாட்சி என்கிறோம்.

மயிலாடுதுறையில் உள்ள பேராசிரியர் ஜெயராமன். இவர்களின் தமிழ்த் தேசியக் கோட்பாடு பற்றிக் கிழித்துத் தொங்க விட்டிருக்கிறார். சீமான் கட்சியின் கொள்கை அறிக்கையில் குடியரசுத் தலைவர் ஆட்சி(Presidential democracy) முறை வேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். தமிழ்த் தேசிய அரசியலுக்கு நேர் எதிரானது இல்லையா இது என்று கேட்கிறார். அமெரிக்காவில் குடியரசுத் தலைவர் ஆட்சி முறை இருக்கிறது என்று சொன்னால். அங்கே ஒரே மொழி, ஒரே பண்பாடு. ஒரே தேசிய இனம்! இந்தியாவில் அப்படித்தான் சொல்ல முடியுமா?

நாடாளுமன்ற ஜனநாயக முறையைக் கைவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி முறைக்குச் செல்வது என்பது, தமிழ்த் தேசியத்திற்கு மட்டுமில்லை. இந்தியாவில் உள்ள எல்லா மொழி வழித் தேசியங்களுக்கும் அடிக்கிற சாவு மணியாக அமையும்! ஆக மொத்தம். மோடியின் குரலை சீமான் வழிமொழிகிறார் என்பதுதான் அதற்கான பொருள்!

இறுதியாகச் சீமானுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் எந்த அரசியலை வேண்டுமானாலும் பேசுங்கள். கலைஞரை, தி.மு.கழகத்தை விமர்சனம் செய்யுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. சொல்லவும் முடியாது. அது உங்கள் உரிமை. ஆனால் அது அரசியல் தளத்தில் அமைய வேண்டும். அப்படி இல்லாமல், தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றி தரக்குறைவான சொற்களைத் தொடர்ந்து பேசுவீர்களானால், நாடு முழுவதும் தி.மு.கழகத் தொண்டர்கள் உங்கள் விஜயலட்சுமியின் குரலை ஒளிபரப்ப வேண்டிய கட்டாயம் வந்து சேரும்!

நீங்கள் திரித்துப் பாடும் அந்தப் பாடலின் சில வரிகளைச் சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

"அண்ணாவின் அடி நின்று அறமான வழி செல்லும் அதிமேதை கருணாநிதி! குண்டேந்தி பீரங்கி வந்தாலும் கொள்கை மாறாத கருணாநிதி! சீராளன் கருணாநிதி! அன்புப் பேரான் கருணாநிதி! கல்லக்குடி கொண்ட கருணாநிதி புகழ் வாழ்கவே!"

இவ்வாறு பேராசிரியர் சுப.வீரபாண்டியன் உரையாற்றினார்.



உலகத்திற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தமிழக முதல்வர்,கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார், அதனை தொடர்ந்து கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி மையனூர் ஊராட்சி புனித மைக்கேல் ஆர்சி துவக்க பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் துவக்கி வைத்தனர், இந்த நிகழ்வில் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மழலைச் செல்வங்களுக்கு எழுத்தறிவித்தலோடு பசியாற உணவும் தரும்

# உன்னத ஆட்சி, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூலை 17 -

மழலைச் செல்வங்களுக்கு எழுத்தறிவித்தலோடு, அவர்கள் பசியாற உணவும் தரும் உன்னத ஆட்சி, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.



தினகரன்

ஜூலை 15, 2024 திங்கட்கிழமை

பசியாற்றும் முதல்வர்

இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் இன்று திகழ்கிறதென்றால், அதற்கு தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மக்கள் நல திட்டங்களே முக்கிய காரணமாகும். தமிழ்நாடு முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளில் இருந்தே மக்கள் நலன் காக்கும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். விடியல் பயண திட்டத்தின் கீழ் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகளுக்கு இலவச பஸ் பயணம் என்னும் திட்டம் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, இன்று நாடு முழுவதும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்த திட்டத்தை மற்ற மாநிலங்கள் முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, செயல்படுத்த தொடங்கியுள்ளன. இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் கலை

இது குறித்து 15.6.2024 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் இன்று திகழ்கிறதென்றால், அதற்கு தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மக்கள் நல திட்டங்களே முக்கிய காரணமாகும். தமிழ்நாடு முதல்வராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளில் இருந்தே மக்கள் நலன் காக்கும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். விடியல் பயண திட்டத்தின் கீழ் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகளுக்கு இலவச பஸ் பயணம் என்னும் திட்டம் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, இன்று நாடு முழுவதும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்த திட்டத்தை மற்ற மாநிலங்கள் முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, செயல்படுத்த தொடங்கியுள்ளன.

இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் கீழ், பெண்களுக்கு மாதம் ரூ.1000 உரிமை தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. புதுமைப்பெண் திட்டம், மகளிர் திருமண நிதியுதவி திட்டம், பணியாற்றும் மகளிருக்கு சமூக நலத்துறையின் கீழ் 'தோழியர் விடுதிகள்' என இந்த திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுக்கு என தீட்டப்படும் நல்ல திட்டங்களை சொல்லிக் கொண்டே போகலாம். பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் இந்த அரசின் திட்டங்கள் ஏராளம்.

தமிழக முதல்வரின் கனவு திட்டமான 'நான் முதல்வன்' திட்டம் தொடங்கி, தகைசால் பள்ளிகள் திட்டம், ஊட்டசத்து குறைபாடு இல்லாத மாணவர்களை உருவாக்கும் திட்டம், இல்லம் தேடி கல்வி என பல திட்டங்கள் மாணவ, மாணவிகளின் கல்வி தரத்தை உயர்த்தி வருகிறது. அந்த வகையில் தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டம், இந்த திட்டங்களுக்கு எல்லாம் சிகரமாக திகழ்கிறது. படிக்கிற காலத்தில் காலை உணவின்றி மாணவர்கள் பள்ளிக்கு வருவது தடைபடக்கூடாதே என்ற நல்லெண்ணத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 15.9. 2022ம் தேதியன்று காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார்.

அத்திட்டத்தில் 1545 அரசு பள்ளிகளை சேர்ந்த ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழந்தைகள் பயன் பெற்றனர். மக்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பு காரணமாக தமிழகத்தில் உள்ள 30 ஆயிரத்து 992 தொடக்கப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது. அதன் வாயிலாக அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 18 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பயன் பெற்றனர். இத்திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவுப்படுத்த மாட்டார்களா என்கிற ஏக்கம், அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும், அவர்களது பெற்றோருக்கும் இருந்து வந்தது.

அந்த குறையையும் தீர்க்க இதோ திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் இன்று முதல், அத்திட்டத்தின் அடுத்தக்கட்ட நகர்வை முன்னெடுக்கிறார். காமராஜர் பிறந்த நாளான இன்று தமிழகத்தில் உள்ள 3 ஆயிரத்து 995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப் பட உள்ளது. இன்று முதல் காலை உணவு திட்டத்தில் 2 லட்சத்து 23 ஆயிரம் குழந்தைகள் கூடுதலாக பயன்பெற உள்ளனர்.

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் அருகே கீழச்சேரி கிராமத்தில் உள்ள புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் தமிழக முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார். தமிழகத்தில் இனிமேல் தொடக்கப்பள்ளி மாணவர்கள் காலை, மதிய உணவுகள் குறித்த எவ்வித கவலையுமின்றி பள்ளிகளுக்கு சென்று பாடங்களை படிக்கலாம். தொடக்க கல்வியை நாடி வரும் மழலை செல்வங்களுக்கு எழுத்தறிவித்தலோடு, அவர்கள் பசியாற உணவும் தரும் உன்னத ஆட்சி, இந்தியாவிலே தமிழகத்தில் மட்டுமே உள்ளது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி தண்டலை கிராமத்தில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். அருகில் டி.ஆர்.ஒ. சத்யநாராயணன், ஒன்றிய சேர்மன் அலமேலு ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர் அரவிந்தன் மற்றும் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் பலர் உடன் உள்ளனர்.



உலகிற்கே முன்னோடியான "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் விரிவாக்கம் செய்து, தமிழ்நாடு முதலமைச்சர், திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில், தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்ற தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர் ஊராட்சி, பெரியகருப்பூரில் அமைந்துள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து, தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில், கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் செ.பூர்ணிமா, கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவரும், மத்திய ஒன்றிய தி.மு.க. செயலாளருமான தி.கணேசன், தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர்களின் கூட்டமைப்பு குழுத் தலைவர் ஆர்.கே.பாஸ்கர், வட்டாட்சியர் பு.வெங்கடேஸ்வரன், வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் சுதா அம்பிகாபதி, எஸ்.சந்திரசேகரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அபிராமி சுந்தரம், மாவட்ட பிரதிநிதி உதயம் கோவிந்த், முன்னாள் நகர இளைஞரணி அமைப்பாளர் க.ரத்தினசாமி, பள்ளி தலைமை ஆசிரியர் கிரேசி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.